நாள் 15.09.2021 - புதன் கிழமை

OS. No. 96/2014

PW1 செல்வம், த/பெ. சிவநேசன்

சத்திய பிரமாணம் செய்துவிக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி சிவநேசன் எனது தகப்பனார் ஆவார். 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் எனது சித்தப்பா முறையானவர்கள். செந்தமிழ்செல்வி, சுமதி என்னுடைய சகோதரிகள் ராஜலெட்சுமி எனது தங்கையின் மகள், கார்த்திகேயன் எனது மச்சான், ராஜகுமார் எனது தங்கையின் மகன் ஆவார். தாவா சொத்தின் அ மற்றும் ஆ பட்டியல் சொத்துகள் 1ம் பிரதிவாதி சிவநேசன் தனது சொந்த சம்பாதியத்தில் வாங்கிய சொத்துக்களை அவரது பெற்றோர்களின் பெயரில் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 15.07.2002 ந் தேதி அன்று முல்லையம்மாள் என்பவர் தாவா சொத்தின் ஒரு பகுதியை 2ம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கப்பட்டுள்ளதாக சொல்வது தவறு. 17.07.1985 அன்று போடப்பட்ட பிரிவினை பத்திரத்தில் எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் தவறு. பெருமாள் உடையாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே 30.11.1986 அன்று கிரய ஒப்பந்தம் போடப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன் அடிப்படையில் மேற்படி சொத்தை எனது பாட்டியின் ஒப்படைத்தார்கள். தாவா சொத்தை தவிர கொல்லாபுரத்தில் 10 மா நஞ்சை நிலம் உள்ளது என்றால் சரிதான். அதை என் அப்பா தான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பெருமாள் உடையார் வழக்கறிஞர் மூலமாக 04.12.1978 அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். நான், எனது சித்தப்பா அனைவரும் சேர்ந்து கொண்டு எனது அப்பாவிடமுள்ள சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.